ஏன் இவ்வளவு தயக்கம் காட்ட வேண்டும்? இனிமேலாவது அரசு அவர்களது கோரிக்கையை கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது சம்பளப் பிரச்னை அல்ல, பகுதி நேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாகவும், மாற்றலுக்குட்பட்டவர்களாகவும் செய்ய வேண்டும் என்று, அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. நாகராஜன்: இந்த கிராம உத்தியோகஸ்தர்களை சொந்த ஊர்களிலே பணிபுரியவிடாமல், வேறு ஊர்களுக்கு மாற்றப்படுகிறவர்களாகவும் ஆக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Mettupalayam as taluk

* 306 Q.—THIRU M. C. THOOYAMANI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken by the Government to upgrade Mettupalayam as a main taluk?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மேட்டுப்பாளையம் நகரை தலைமை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு தற்போது எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் அவனுசி வட்டத்திலே மிகப் பெரிய நகரமாகும். அதைத் தலைமை நகரமாக மாற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாகக் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டாவது, அதனை தலைமை நகரமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல்லாண்டு காலமாகப் பரிசீலித்துத்தான், 1972-ல் அது சப்-தாலுக்காவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது, வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாகவோ, மாவட்ட ஆட்சித் தலைவராலோ, அப் பகுதியை வட்டாரமாக உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை அனுப்பப்படவில்லை.